BSNL ஊழியர் சங்கம்
தமிழ் மாநிலம்

சுற்றறிக்கை எண்:-126 **தேதி:-30.01.2019**

விருதுநகர் கடலூர் மாவட்ட பிரச்சனைகளை தீர்த்து வைக்கக் கோரி
05.02.2019 முதல் மாநில செயலாளர் உண்ணாவிரதம்

அன்பார்ந்த தோழர்களே,

விருதுநகர் மாவட்டத்தில் பத்தாண்டு காலத்திற்கு மேல் ஒப்பந்த ஊழியராக பணியில் இருந்த தோழர்கள் நாராயணன் மற்றும் மூர்த்தி ஆகியோரை மாவட்ட நிர்வாகம் அந்த ஒப்பந்ததாரர் மூலம் பணி நீக்கம் செய்தது. இதற்கெதிராக மாவட்ட சங்கம் மாவட்ட நிர்வாகத்தோடு பலமுறை பேசியது. ஆனால் மாவட்ட நிர்வாகம், அந்த ஒப்பந்தக்காரர் அவர்களை ஏற்றுக்கொள்ள மறுக்கிறார் என காரணம் சொல்லியது.

இந்த பிரச்சனையை BSNL ஊழியர் சங்கத்தின் உதவி பொதுச் செயலாளர் தோழர் S.செல்லப்பா மற்றும் TNTCWU மாநில தலைவர் தோழர் M.முருகையா ஆகியொர் மாநில அலுவலகத்தில் GM(HR) அவர்களை 18.01.2019 அன்று சந்தித்து பேசியதின் அடிப்படையில், ஒரு வார காலத்திற்குள் விருதுநகர் மாவட்ட பொதுமேலாளர் ஒப்பந்தக்காரரிடம் விவாதித்து அந்த பணி நிக்கம் செய்யப்பட்டவர்களை மீண்டும் பணிக்கு எடுத்துக் கொள்வதாக உறுதி அளித்ததின் அடிப்படையில் 21.01.2019 அன்று நடைபெறுவதாக இருந்த மாவட்ட செயலாளரின் உண்ணாவிரதம் ஒத்தி வைக்கபட்டது. GM(HR) வாக்குறுதி கொடுத்து 10 நாட்களுக்கு மேல் ஆன பின்பும் பிரச்சனைகள் தீரவில்லை.

எனவே வேறு வழியின்றி விருதுநகர் மாவட்ட செயலாளர் தோழர் S.ரவீந்திரன், மாநில அமைப்பு செயலாளர் தோழர் A.சமுத்திரக்கனி மற்றும் மாவட்ட தலைவர் தோழர் ஜெயகுமார் ஆகியோர் 28.01.2019 முதல் காலவரையற்ற உண்ணாவிரதத்தை மேற்கொண்டனர்.

ஆனால் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்கு பதிலாக மாவட்ட நிர்வாகம் பிரச்சனையை அதிகரித்தது. SEWA BSNL விருதுநகர் மாவட்ட சங்கம் ஒப்பந்ததாரரின் பினாமி போல செயல்பட்டு நமது மாவட்ட செயலாளரை தரக்குறைவாக தனது NOTICE BOARDல் எழுதியது. மாவட்ட நிர்வாகம் அதற்கு துணையாக நின்றுக் கொண்டுள்ளது. நிர்வாகம் இந்த பிரச்சனையில் தலையிடவில்லை எனில் நாம் அதனை சட்ட ரீதியாக சந்திக்க உள்ளோம்.

நமது உண்ணாவிரதத்தின் தீவிரத்தால் 29.01.2019 மாவட்ட நிர்வாகம் கூறியதின் அடிப்படையில் பணி நீக்கம் செய்யப்பட்ட தோழர்களில் ஒருவரான நாராயணன் அவர்களை மீண்டும் காக்கிவாடன்பட்டி தொலைபேசி நிலையத்தில் மீண்டும் பணியமர்த்தப் பட்டுள்ளார். ஆனால் எரிச்சநத்தம் என்கிற தொலைபேசி நிலையத்திலிருந்து பணி நீக்கம் செய்யப்பட்ட தோழரை மீண்டும் பணியமர்த்தவில்லை. மாவட்ட நிர்வாகம், மாநில நிர்வாகத்திற்கு பல தவறான தகவல்களை கொடுத்துள்ளது.

கடலூரில்….:- அதே போல கடலூர் மாவட்டத்தை சார்ந்த தோழர் K.விஜயானந்த் அவர்கள் JE இலாகா தேர்வில் வெற்றிபெற்று பயிற்சி முடித்தவுடன் நெய்வேலியில் POSTING போடப்பட்டது. அவருக்கு சட்டபூர்வமாக கடலூரில் தான் பதவி உயர்வு வழங்க வேண்டும் என மாவட்ட சங்கம் கார்பரேட் அலுவலக உத்தரவைக் காட்டி கோரியபோது மாவட்ட நிர்வாகம் மனிதாபிமானமின்றி அதனை மறுத்து வருகிறது. இது தொடர்பாக மாநில அலுவலகத்தில்

உள்ள GM(HR) அவர்களை சந்தித்து விவாதித்த போது மாவட்ட நிர்வாகத்திற்கு வழிகாட்ட உறுதி கூறினார். ஆனால் கடலூர் மாவட்ட நிர்வாகமோ அடாவடித்தனமாக பல உண்மைக்கு புறம்பான தகவல்களை மாநில நிர்வாகத்திற்கு கொடுத்து வருகிறது.

கடலூர் மாவட்ட சங்கம் இந்த பிரச்சனைக்கு எதிராக 29.01.2019 அன்று ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளது. அடுத்த கட்டமாக 05.02.2019 அன்று மாவட்ட தலைநகரில் தர்ணா போராட்டம் என அறிவித்துள்ளது.

28.01.2019 அன்று கூடிய BSNL ஊழியர் சங்கத்தின் மாநில மையக் கூட்டம் இந்த பிரச்சனையை அக்கறையோடு விவாதித்தது. மாவட்ட நிர்வாகங்கள், பிரச்சனைகளை தீர்வு காண்பதில் பாரபட்சம் காட்டுகிறது என நாம் மநில நிர்வாகத்தின் கவனத்திற்கு கொண்டு சென்றோம் என்றால், அதில் தலையிடுவதில் மாநில நிர்வாகம் அக்கறை காட்டுவதில்லை. மாவட்ட நிர்வாகங்கள், சரியான நிலை எடுக்காத போது அதனை சரி செய்ய வேண்டிய மாநில நிர்வாகம், ஒதுங்கி நின்று வேடிக்கை பார்ப்பது சரியல்ல. பாதிக்கப்படுகின்ற ஏழை எளிய தொழிலாளர் பிரச்சனைகளில் தீர்வை காண்பதற்கு மாதக் கணக்கில் ஆவது சரியல்ல. அது பாதிக்கப்பட்ட தோழர்களுக்கு பல நாட்கள் மன உளைச்சலைக் கொடுக்கிறது. அதன் மூலம் BSNLல் நடைபெற வேண்டிய பணிகள் பாதிப்பிற்கு உள்ளாகிறது.

எனவே மேலே சொல்லபட்ட இரண்டு பிரச்சனைகளிலும் உடனடியாக தீர்வு காண்பது அவசியம் என தமிழ் மாநில மையக்கூட்டம் கருதியது. எனவே இந்த இரண்டு பிரச்சனைகளிலும் உடனடியாக தீர்வு வேண்டும் என வலியுறுத்தி 05.02.2019 காலை 10.30 மணி முதல் மாநில தலைமை பொதுமேலாளர் அலுவலக வளாகத்தில் BSNL ஊழியர் சங்கத்தின் மாநில செயலாளர் உண்ணாவிரதம் மேற்கொள்வது என முடிவெடுக்கபட்டு நிர்வாகத்திற்கு கடிதமும் வழங்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் விருதுநகர் மாவட்டத்தில் நடைபெற்ற காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தை 30.01.2019 அன்று மாலை முடித்துக் கொள்ள மாநில சங்கம் கேட்டுக் கொண்டது. அதே போல கடலூர் மாவட்டத்திலும், 05.02.2019 அன்று நடைபெற இருந்த தர்ணாவை விலக்கிக் கொள்ளுமாறும் மாநில சங்கம் கேட்டுக் கொண்டது.

தற்போது இந்த இரண்டு பிரச்சனைகளையும் தீர்வு காண வேண்டியது மாநில நிர்வாகமே! பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு உடனடியாக நியாயம் வழங்குவார்கள் என நம்புகிறோம். இல்லையெனில் தமிழக BSNLல் தொழில் அமைதி குலைந்ததென்றால் அதற்கு மாநில நிர்வாகம் தான் பொறுப்பு.

தோழர்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை எதிர்த்து போராடுவது நமது கடமை. போராட்டங்கள் மூலமே அந்த பாதிப்புகளை களைய முடியும். எனவே, சென்னையில் தமிழ் மாநில செயலாளர் உண்ணாவிரதம் போரட்டத்திற்கு கடலூர், விருதுநகர், வேலூர், பாண்டி ஆகிய மாவட்டங்களிலிருந்து தோழர்களை திரட்டி வரும்படி மாவட்ட செயலாளர்களை தமிழ் மாநில சங்கம் கேட்டுக்கொள்கிறது.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

(A.பாபு ராதாகிருஷ்ணன்)
மாநில செயலாளர்.